**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு மே மாதம் 26-ஆம் நாள் செவ்வாய்கிழமை

CC. No. 301 of 2025

CNR No. TNTV15-000622-2025

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 403/2023 ----- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

1. ராம்கி, 24/2026,
த/பெ. ராமலிங்கம்,
வடக்கு காலணி தெரு,
சீத்தக்கமங்கலம்.
2. மணிகண்டன், 25/2026,
த/பெ. ராமதுரை,
வடக்கு காலணி தெரு,
சீத்தக்கமங்கலம். ------ எதிரி

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.301 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Sub-Inspector of Police, Kodavasal PS. in Cr.No.397/2023 |



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:00:34 +0530

<table>
<tr><td>3.</td><td>Name of the accused</td><td colspan="3">1. R.Ramki<br>2. R.Manikandan</td></tr>
<tr><td>4.</td><td>Father’s Name</td><td colspan="3">S/o. Ramalingham<br>S/o. Ramadurai</td></tr>
<tr><td>5.</td><td>Occupation</td><td colspan="3">-</td></tr>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">A1 and A2- North Colony Street, Seethakkamangalam</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">24/2026<br>25/2026</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">11.08.2023</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">15.08.2023<br>16.10.2023</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">A1 and A2-15.08.2023</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">A1 and A2-22.08.2023</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 207 Cr.P.C.</td><td colspan="3">14.05.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 14.05.2026 the accused questioned on substance of accusation U/s. 294(b), 324, 506(ii) IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="5">15</td><td rowspan="5">Date of commencements of trial -The date of examination – in chief and cross- examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>19.05.2026</td><td>-</td></tr>
<tr><td>PW2</td><td>19.05.2026</td><td>-</td></tr>
<tr><td>PW3</td><td>19.05.2026</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>21.05.2026</td><td>21.05.2026</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">22.05.26</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:00:38 +0530

| | | |
|---|---|---|
| 17. | Sentence on order | முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 294(b), 324, 506(ii) IPC-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.ஜெயகுமார், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்</u>** :-

1. குடவாசல் காவல் சரகம் சீதக்கமங்கலம் வடக்குத்தெருவை சேர்ந்த இவ்வழக்கின் வாதியான சாட்சி-1 மருதுபாண்டியும் அவரது சித்தப்பா மகனான உதயகுமாரும் 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் நால்வரும் கடந்த 11.08.2023 ந் தேதி கும்பகோணம் அய்யர் பண்ணையில் வேலை



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:00:43 +0530

செய்துக்கொண்டிருந்த போது அவர்களுக்குள் வாய்சண்டை ஏற்பட்டு பின்பு சமாதானம் ஆகியுள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக அன்று இரவு 09.00 மணியளவில் சாட்சி-1 மற்றும் சாட்சி-2 இருவரும் சீதக்கமங்கலம் காளியம்மன் கோவிலில் உட்கார்ந்திருந்த போது வந்த 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் இருவரும் சாட்சிகள் 1 மற்றும் 2 யை பார்த்து குச்சிகாரி தேவடியா மகன்களா இங்க அடிச்சி பாருங்கடா என்று சொன்னவர்களை பார்த்து அங்க நடந்ததை ஏன்டா இங்கேயும் பேசி அடிக்க வர்றீங்க என்று கேட்டுக்கொண்டு இருக்கும் போது 1 ஆம் எதிரி கையில் வைத்திருந்த சிறிய கத்தியால் மருதுபாண்டியின் வலது கையில் கிழித்து சொற்காயத்தை ஏற்படுத்தியும், தடுக்க வந்த சாட்சி 2 உதயகுமாரை 2 ஆம் எதிரி கட்டையால் இடது தோள்பட்டையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், அவர்கள் இருவரும் போகும் போது உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கையில் வைத்திருந்த ஆயுதங்களை காட்டி மிரட்டியும் குற்றம்புரிந்துள்ளதால் எதிரிகள் மீது சட்டப் பிரிவுகள் 294(b), 324, 506(2) இதச ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:00:47 +0530

போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதச ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தன் மீதான குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார்கள். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது.

6. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது ஊரைச் சேர்ந்தவர் ஆவார்கள் என்றும், கடந்த 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் சரியாக நினைவில்லை என்றும், ஒரு நாள் இரவு 09.00 மணியளவில் தானும், உதயகுமார் என்பவரும் தங்கள் ஊர் காளியம்மன் கோவில் அருகே உட்கார்நிருந்த போது அன்றைய தினம் மின்வெட்டு துண்டிக்கப்பட்டு மின் விளக்குகள் எரியாத நிலையில் இருட்டாக இருந்த சமயத்தில் திடீரென்று எனக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனத்தில் வந்தவர் எங்கள் மீது மோதி நாங்கள் கீழே விழுந்து விட்டோம் என்றும், அதில் தனக்கு வலது கையிலும் தலையிலும், உதயகுமாருக்கு தோள்பட்டையில் காயமும் ஏற்பட்டது என்றும், அருகில் இருந்தவர்கள் எங்களை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எங்களை சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள் என்றும், தாங்கள்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:00:52 +0530

உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது போலிசார் தங்களை விசாரித்த போது எங்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்தி, காயத்தை ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வாய்மொழியாக சொன்னோம் என்றும், போலிசார் தன்னிடம் ஒரு பேபரில் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள் என்றும், தன்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், போலிசார் தன்னை விசாரித்த போது மேற்கூறிய சங்கதிகளை நான் சொன்னேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசயாம் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது ஊரைச் சேர்ந்தவர் ஆவார்கள் என்றும், அ.சா.1ஐ தனக்கு தெரியும் என்றும், அவர் எனது சித்தப்பா மகன் ஆவார் என்றும், கடந்த 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் சரியாக நினைவில்லை என்றும், ஒரு நாள் இரவு 09.00 மணியளவில் தானும், மருதப்பாண்டி என்பவரும் தங்கள் ஊர் காளியம்மன் கோவில் அருகே உட்கார்நிருந்த போது அன்றைய தினம் மின்வெட்டு துண்டிக்கப்பட்டு மின் விளக்குகள் எரியாத நிலையில் இருட்டாக இருந்த சமயத்தில் திடீரென்று எங்களுக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனத்தில் வந்தவர் எங்கள் மீது மோதி தாங்கள் கீழே விழுந்து விட்டோம் என்றும், அதில் மருதப்பாண்டிக்கு வலது கையிலும் தலையிலும், தனக்கு தோள்பட்டையில் காயமும் ஏற்பட்டது என்றும், அருகில் இருந்தவர்கள் தங்களை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள் என்றும், தாங்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது போலிசார்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:00:56 +0530

எங்களை விசாரித்த போது தங்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்தி, காயத்தை ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வாய்மொழியாக சொன்னோம் என்றும், போலிசார் தன்னை விசாரித்த போது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.3 அவரது சாட்சியத்தில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசயாம் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது ஊரைச் சேர்ந்தவர் ஆவார்கள் என்றும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் சரியாக நினைவில்லை என்றும், ஒரு நாள் குடவாசல் போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக தன்னிடம் விசாரித்தார்கள் என்றும், பின்பு தன்னிடம் விசாரணை சம்பந்தமாக ஒரு தாளில் கையொப்பம் கேட்டார்கள் என்றும், தாங்கள் கையொப்பம் செய்து கொடுத்தோம் என்றும், அதன்பின்னிட்டு போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.4 அவரது சாட்சியத்தில், தான் தற்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள நவல்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 2023 ம் ஆண்டு குடவாசல் காவல் நிலையத்தில் நான் பணிபுரிந்த போது தன்னுடன் தனக்கு முன்னால் பணிபுரிந்த இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும் முதல்கட்ட விசாரணை செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி தற்போது வேறு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருவதாலும், இவ்வழக்கில் தான் உடனிருந்த வகையிலும் விசாரணை அதிகாரி என்ற வகையிலும் மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளரின்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:01:00 +0530

கையெழுத்து மற்றும் கையொப்பம் நன்கு தெரியும் என்ற அடிப்படையிலும் நீதியின் நலன் கருதி காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு நான் சாட்சியமளிக்கிறேன் என்றும், கடந்த 11.08.2023 ம் தேதியன்று குடவாசல் காவல் நிலையத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்க பெற்ற தகவலைப் பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த லெட்சுமணன் மகன் மருதுபாண்டி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து காவல் நிலைய மனு எண். 409/2023 ஆக மனு விசாரிக்கப்பட்டு மனு விசாரணைக்கு பின் கடந்த 15.08.2023 ம் தேதி அன்று காவல் நிலைய குற்ற எண்.403/2023 இதச சட்டப்பிரிவுகள் 294(b), 324,506(2) ன் கீழ் எதிரிகளின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், சமாதான மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், சமாதான மனுவில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** என்றும், மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 08.30 மணியளவில் சம்பவ இடமான சீதக்கமங்களம் காளியம்மன் கோவில் அருகே சென்று சாட்சிகள் சிவரஞ்சனி மற்றும் முத்து ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், **(பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:01:04 +0530

செய்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கில் சம்பவம் உண்மை என்று தெரிய வர எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் சீதக்கமங்களம் காளியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்தவர்களை அன்றைய தினமே 13.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், பின்னர் சிறப்புஉதவிஆய்வாளர் பணிமாறுதலில் சென்றுவிட்ட படியால் இவ்வழக்கு கோப்பினை காவல் நிலைய வசத்திலேயே வைத்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கினை தான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்த போது மேற்படி சிறப்புஉதவிஆய்வாளரிடம் கூறிய அதே சங்கதிகளை தன்னிடம் கூறியதால் தான் எவ்வித மறு வாக்குமூலமும் பெறவில்லை என்றும், பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட மருதுபாண்டி மற்றும் உதயகுமார் ஆகியோர்களுக்கு விபத்து பதிவேடு பதிவு செய்தும் மற்றும் முதல் உதவி சிகிச்சை அளித்த திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு. சிவராமன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேட்டினை பெற்று தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் காயம்பட்ட மருதுபாண்டி என்பவர்க்கு சிகிச்சை அளித்த திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு. அருள்பிரசாத் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்றினை பெற்று தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் காயம்பட்ட உதயகுமார் என்பவர்க்கு சிகிச்சை அளித்த திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு. நடராஜசேதுபதி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்றினை பெற்று தாக்கல் செய்துள்ளார். மேற்படி காயம்பட்ட இரண்டு நபர்களுக்கும் ஏற்பட்ட காயமானது சொற்பகாயம் என்று மேற்படி மருத்துவர்கள் கருத்துரை வழங்கியுள்ளார்கள்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:01:08 +0530

என்றும், மேலும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது இதச சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) ன் கீழ் தண்டித்தக்க குற்றமென கடந்த 16.10.2023 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி "பொய் சாட்சி" என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்கள். இவ்வழக்கில் கு.வி.மு.ச.பிரிவு 320-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பவமானது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் சாட்சிகளிடம் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காண்பித்து அதனால் ஏற்பட்டுள்ள



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:01:12 +0530

சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

12. **<u>அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்</u>**:-

இவ்வழக்கின் அ.சா.1 கொடுத்த புகாரில், வாதியான மருதுபாண்டி,குடவாசல் காவல் சரகம் சீதக்கமங்கலம் வடக்குத்தெருவை சேர்ந்த இவ்வழக்கின் வாதியான சாட்சி-1 மருதுபாண்டியும் அவரது சித்தப்பா மகனான உதயகுமாரும் 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் நால்வரும் கடந்த 11.08.2023 ந் தேதி கும்பகோணம் அய்யர் பண்ணையில் வேலை செய்துக்கொண்டிருந்த போது அவர்களுக்குள் வாய்சண்டை ஏற்பட்டு பின்பு சமாதானம் ஆகியுள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக அன்று இரவு 09.00 மணியளவில் சாட்சி-1 மற்றும் சாட்சி-2 இருவரும் சீதக்கமங்கலம் காளியம்மன் கோவிலில் உட்கார்ந்திருந்த போது வந்த 1 மற்றும் 2 ஆம் எதிரிகள் இருவரும் சாட்சிகள் 1 மற்றும் 2 யை பார்த்து குச்சிகாரி தேவடியா மகன்களா இங்க அடிச்சி பாருங்கடா என்று சொன்னவர்களை பார்த்து அங்க நடந்ததை ஏன்டா இங்கேயும் பேசி அடிக்க வர்றீங்க என்று கேட்டுக்கொண்டு இருக்கும் போது 1 ஆம் எதிரி கையில் வைத்திருந்த சிறிய கத்தியால் மருதுபாண்டியின் வலது கையில் கிழித்து சொற்காயத்தை ஏற்படுத்தியும், தடுக்க வந்த சாட்சி 2 உதயகுமாரை 2 ஆம் எதிரி கட்டையால் இடது தோள்பட்டையில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், அவர்கள் இருவரும் போகும் போது உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கையில் வைத்திருந்த ஆயுதங்களை காட்டி மிரட்டியும் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளதாக புகார் அளித்துள்ளார்.

13. ஆனால், நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்த அ.சா.1 தனது முதல் விசாரணையில், தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வந்து ஓட்டுநராக பணிபுரிந்து



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:01:17 +0530

வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், அவர்கள் தனது ஊரைச் சேர்ந்தவர் ஆவார்கள் என்றும், கடந்த 3 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் சரியாக நினைவில்லை என்றும், ஒரு நாள் இரவு 09.00 மணியளவில் தானும், உதயகுமார் என்பவரும் தங்கள் ஊர் காளியம்மன் கோவில் அருகே உட்கார்நிருந்த போது அன்றைய தினம் மின்வெட்டு துண்டிக்கப்பட்டு மின் விளக்குகள் எரியாத நிலையில் இருட்டாக இருந்த சமயத்தில் திடீரென்று எனக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனத்தில் வந்தவர் எங்கள் மீது மோதி நாங்கள் கீழே விழுந்து விட்டோம் என்றும், அதில் தனக்கு வலது கையிலும் தலையிலும், உதயகுமாருக்கு தோள்பட்டையில் காயமும் ஏற்பட்டது என்றும், அருகில் இருந்தவர்கள் எங்களை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எங்களை சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள் என்றும், தாங்கள் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது போலிசார் தங்களை விசாரித்த போது எங்கள் மீது மோதி விபத்து ஏற்படுத்தி, காயத்தை ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி வாய்மொழியாக சொன்னோம் என்றும், போலிசார் தன்னிடம் ஒரு பேபரில் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள் என்றும், தன்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், போலிசார் தன்னை விசாரித்த போது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன் என்றும் புகார் மனுவில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் நேர் எதிரான சங்கதிகளை கூறி சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவின்றி முரண்பட்டதாக உள்ளது என்பதை தெளிவாக காண முடிகிறது. இவ்வாறு இருக்கையில், பாதிக்கப்பட்ட சாட்சி அ.சா.2 மற்றும் பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 ம்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:01:21 +0530

பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளனர். அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்ட போதிலும், அரசு தரப்பில் அவருக்கு ஆதரவாக அவர்களிடமிருந்து எவ்வித சாட்சியமும் குறுக்கு விசாரணையில் பெறப்படவில்லை.

14. எனவே, அரசு தரப்பு வழக்கில் கூறியுள்ளவாறு எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதற்கோ, அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை புரிந்ததற்கோ போதிய முகாந்திரம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியளிக்காத பட்சத்தில் அ.சா.4-ன் சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரிகள் குற்றவாளி என்று கருதுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. மேலும், இவ்வழக்கின் நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு கு.வி.மு.ச பிரிவு 320-ன் கீழ் ஒரு மனுவினை தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அந்த சமாதான மனுவில் இருதரப்பினரும் ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்துள்ளதையும் காணமுடிகிறது.

16. இந்நிலையில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் *Madan Mohan Abbot Vs State of Punjab reported in (2008) 4 SCC 582 : (2008) 2 SCC (Crl.) 464* என்ற வழக்கில் வழங்கியுள்ள முன்தீர்ப்பில் பத்தி 5-ல் பொதுவாக குற்ற வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபரும், எதிரியுடன் சமாதனமாக செல்லும்போது அவற்றை தீர்மானிப்பது குறித்து எடுத்துரைத்துள்ள வழிமுறைகள் பின்வருமாறு :

> *"….We need to emphasize that it is perhaps advisable that in disputes where the question involved is of a purely personal nature, the*



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:01:26 +0530

*Court should ordinarily accept the terms of the compromise even in criminal proceedings as keeping the matter alive with no possibility of a result in favour of the prosecution is a luxury which the Courts, grossly overburdened as they are, cannot afford and that the time so saved can be utilized in deciding more effective and meaningful litigation. This is a common sense approach to the matter based on ground of realities and benefit of the technicalities of the law."*

17. இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும்போது, இவ்வழக்கில் உள்ள பிரச்சனை முற்றிலும் தனி நபர் தன்மையுடைய வினா சம்மந்தப்பட்டதாக இருக்கிறது என்பதையும், அரசுத் தரப்புக்கு சாதகமான நிலையில் முடிவினை எட்ட முடியாத நிலையில் இந்நிலையில், இவ்வழக்கை நடப்பில் வைத்திருப்பது ஒரு ஆடம்பரமே என்றும், இவ்வழக்கை முடிவுக்கு கொண்டுவருவதன் மூலம் நீதிமன்றத்தின் பெரும்சுமையை குறைப்பதுடன் நீதிமன்றத்தின் நேரத்தை சேமிப்பதிலும், அதனை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண பயன்படுத்தவும் இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. எனவே, இவ்வழக்கில் எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதச வின் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>உத்தரவு</u>**



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:01:33 +0530

19. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதச வின் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

20. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் ஏதும் தாக்கல் செய்யப்படாத காரணத்தினால் அதனை பொறுத்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணிணியில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மே திங்கள் 26-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:01:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. மருதுபாண்டி-புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. உதயகுமார்-பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.3 | திரு. முத்து-பார்வை மகசர் சாட்சி |

| | |
|---|---|
| அ.சா.4 | திரு. கோபிநாத்-உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 15.08.2023 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1-ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 19.05.2026 | சமரச மனுவில் உள்ள அ.சா.1-ன் முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 19.05.2026 | சமரச மனுவில் உள்ள அ.சா.2-ன் முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 15.08.2023 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.5 | 15.08.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 15.08.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | 15.08.2023 | மாதிரி வரைபடம் |

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:01:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**வழக்கு சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | 15.08.2023 முதல் 22.08.2023 |
| 2. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 28.05.2025 |
| 3. | குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 14.05.2026 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | எதிரி தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 320-ன் கீழ் 19.05.2026 அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது. | | |
| 5. | சாட்சிகள் விசாரணை | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | PW-1 : | 19.05.2026 | - |
| | | PW-2 : | 19.05.2026 | - |
| | | PW-3 : | 19.05.2026 | - |
| | | PW-4 : | 21.05.2026 | 21.05.2026 |
| 6. | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 22.05.2026 | | |
| 7. | எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விபரம் | - | | |
| 8. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | - | | |

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.05.26 11:01:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.